ௐ

தணிகை பஞ்சாங்கம்

**Balu Saravana Sarma** *Prohithar – Astrologer*

**No9, 4th street, Kalyan Nagar, Tambaram West, Chennai 45, INDIA. Ph: +91 44 2226 1742, Cell: +91 98403 69677**

Email: prohithar@gmail.com Web: www.prohithar.com

# Iyppaci Month (Kara Varsham 2011) Auspicious Dates

## ஐப்பசி மாதம் (கர வருஷம்2011) சுபம் செய்திட உகந்த நாட்கள்

- **ஐப்பசி மாத பிறப்பு:**

*திருக்கணிதப்படி:* 17.10.2011 திங்கள் அன்று இரவு 11:46 மணி அளவில் சூரியன் துலாராசி பிரவேசம்

*வாக்கியப்படி:* 18.10.2011 செவ்வாய் அன்று காலை 9:06 மணி அளவில் சூரியன் துலாராசி பிரவேசம்.

- **கார்திகை மாத பிறப்பு**

*திருக்கணிதப்படி:* 16.11.2011 புதன் அன்று இரவு 23:35 மணி அளவில் சூரியன் விருச்சிக ராசி பிரவேசம்

*வாக்கியப்படி:* 17.11.2011 வியாழன் அன்று காலை 6:49 மணி அளவில் சூரியன் விருச்சிக ராசி பிரவேசம்

### தீபாவளி: (26.10.2011)



- **நரக சதுர்தசி & தீபாவளி சூத்திரம்**

"ஆஸ்வீஜ மாஸ பகுள சதுர்தசி, இராத்திரி சதுர்த்த ஜாம கால சதுர்தசி வியாபிதம்"

சந்திரமாதமான ஐப்பசி மாதத்தில் தேய்பிறை சதுர்தசி திதி என்று இரவுப்பொழுது **4வது ஜாமத்தில்** வியாபித்துள்ளதோ அன்று நரகசதுர்தசி , அந்த நேரம் சதுர்தசி ஸ்நானம், அடுத்த நாள் தீபாவளி பண்டிகை.

மேற்படி விதிப்படி இவ்வருடம் ஐப்பசி மாதம் 9ம் தேதி புதன் கிழமை அன்று சூரிய உதயத்திற்கு முன்னர் 5:16 வரை மற்றும் 4வது ஜாமத்தில் (இரவு 1:20 முதல் அதிகாலை 3:39 வரை) சதுர்தசி திதி உள்ளதால் அப்பொழுதுதான் நரக சதுர்தசி குளியல் செய்ய உகந்த காலம் ஆகும்.

- **இவ்வருட தீபாவளி அன்று நரகசதுர்தசி குளியல் நேரம் அறிய**

சூரிய மறைவு: 18:24 மறுநாள் சூரிய உதயம்: 5:58 (சென்னை)

மொத்த இரவுகாலம் = சூரிய மறைவு முதல் உதயம் வரை உள்ள காலம்

எளிதாக கணிக்கிட உதயத்துடன் 24ஐ சேர்த்தால்(5:58 + 24) = 29:58 - 18:24(அஸ்தமனம்) =11மணி 34 நிமிடம்

11:34 மணியை 5 பங்காக பிரிக்க 2மணி 18நிமிடம் 48விநாடி வரும்

இதில் 4வது பாகம் இரவு 1:20 முதல் 3:39 வரை உள்ள காலம் ஆகும் இந்த காலத்தில் சதுர்தசி திதி இருப்பதால் **<u>26.10.2011 அன்று அதிகாலைதான் நரகசதுர்தசி குளியல் ஆகும். பின்னர் தீபாவளி திருநாள்</u>**

- **ஜாமம் ஓர் விளக்கம்**

ஜாமம் என்பது ஒரு நாளை 10 பங்காக பிரித்து கணக்கிடுவதாகும்.

இதில் பகல் மற்றும் இரவுப்பொழுது தலா 5 பங்காகும்



இரவு ஜாமப்பொழுது என்பது சூரிய அஸ்தமனம் முதல் சூரிய உதயம் வரை உள்ள காலம்

சமகாலத்தில் ஒரு ஜாமம் என்பது சராசரியாக 2மணி 24 நிமிடங்களாக இருக்கும்,

குளிர் காலத்தில் இரவு ஜாமம் கூடுதலாக இருக்கும். வெயில் காலங்களில் பகல் ஜாமம் கூடுதலாக இருக்கும்

சில கோழிகள் ஜாம நேரத்தில் கூவும் இதை ***ஜாமக்கோழிகள்*** என்று அழைப்பார்கள். இக்கோழி கிராமத்து கடிகாரம்

சிவராத்திரி அன்று கோயில்களில் ஜாமம் அடிப்படையிலேயே வழிபாடு நடைபெறும்

- **தீபாவளி படையல்:**

தீபாவளி அமாவாசை அன்று வருவதால் அன்று முன்னோர் நினைவாக செய்யும் படையல் வழிபாடு செய்ய இயலாது எனவே தீபாவளிக்கு முன்னர் இறைவனடி சேர்ந்த நமது முன்னோர் நினைவாக வழிபடுவதே தீபாவளி படையல்

***இவ்வாண்டு தீபாவளி படையலுக்கு உகந்த நாட்கள்:*** 4 ஐப்பசி வெள்ளி 21.10.2011 நவமி திதி

6 ஐப்பசி ஞாயிறு 23.10.2011 ஏகாதசி திதி

> மகிழ்ச்சியான தீபாவளி அன்று ஆதரவற்றோர் இல்ல குழந்தைகளுக்கு
> உதவி செய்து அவர்களின் வாழ்வில் ஒளி ஏற்றுங்கள்.



- **தன்வந்திரி ஜெயந்தி : 24.10.2011 நோய் நீங்க - உடல் நலம் விளங்க வழிபாடு**

திங்கள் 24.10.2011 அன்று தன்வந்தரி ஜெயந்தி ஆகும். அன்றைய தினம் தன்வந்திரி வழிபாடு, ஹோமங்கள் செய்வது நீண்ட நாள் நோய் நீங்கவும், நோய் வராமல் இருக்கவும் வழிபட உகந்த நாள்

தன்வந்தரி கோயில் இல்லாத ஊர்களில் திருமாலை வழிபட்டாலும் பலன் கிடைக்கும். தங்களுக்காக மட்டும் இன்றி உற்றார், உறவினர், நன்பர்களுக்காகவும் அன்று தன்வந்தரி வழிபாடு செய்து அரோக்கியமாக இருக்க பிரார்தனை செய்யுங்கள்:

அன்று அருகில் உள்ள அரசு மருத்துவமனைக்கு சென்று நோயில் இருக்கும் ஏழைகளுக்கு மருந்து வாங்கி தருவது, உணவு வாங்கிதருவது, போர்வை தருவது போன்ற தர்மங்களை செய்யுங்கள்.

**புதன் கிரகம் சந்திரனால் மறையும் வானவியல் நிகழ்வு - 28.10.2011 அதிகாலை**

நியூசிலாந்து முதல் மலேசியா வரை உள்ள நாடுகளில் இது தெரியும். இந்தியாவில் தெரியாது



❖ **ஸ்கந்த ஷஷ்டி - சூரசம்ஹாரம் -** இவ்வாண்டு கந்த (சுக்ல) சஷ்டி திதி இரண்டு தினங்களிலும் உள்ளது

***வாக்கிய முறைப்படி:*** 31.10.2011 திங்கள் மாலை 4:46 முதல் மறுநாள் செவ்வாய் 1.11.2011 மாலை 3:48 வரை உள்ளது

***திருக்கணித முறைப்படி:*** 31.10.2011 திங்கள் காலை 11:03 முதல் மறுநாள் செவ்வாய் 1.11.2011 காலை 10:06 வரை உள்ளது

சஷ்டி திதி 31.10.2011 திங்கள் மாலையில் சூரிய அஸ்தமனத்தில் - சந்திரோதய காலத்தில் வியாபித்திருப்பதால் திருச்சந்தூரில் கந்தசஷ்டி சூரசம்ஹாரம் நடைபெறும்.

சாஸ்திரப்படி சஷ்டி விரதம், சஷ்டிபூஜை செவ்வாய் 1.11.2011 அன்று தான் கடைபிடிக்க வேண்டும்.

இல்லங்களிலும் செவ்வாய் 1.11.2011 அன்று தான் கந்தசஷ்டி வழிபடவேண்டும்.

## ⁂*⁂*⁂*⁂ ** வானியல் நிகழ்வுகள் Astronomical Phenomena ** ⁂*⁂*⁂*⁂

**October** day Hour
17 1 நிலா மீ வடநிலை Moon furthest North (22.7)
22 14 மகம் சந்திரன் அருகில் Regulus 5.4N of Moon
26 5 சித்திரை சந்திரன் அருகில் Spica 1.9N of Moon
26 12 சந்திரன் அன்மை நிலை Moon at perigee
26 19 முழுநிலவு NEW MOON
28 2 புதன் சந்திரனால் மறைவு Mercury 0.3N of Moon Occn
28 4 சுக்கிரன் சந்திரன் அருகில் Venus 1.9N of Moon
29 1 குரு - பூமி- சூரியன் நேர்கோட்டில் Jupiter at opposition
29 6 கேட்டை சந்திரன் அருகில் Antares 4.0S of Moon
29 20 சந்திரன் மீதென் நிலை Moon furthest South (-22.7)

**November** day Hour
8 12 சந்திரன் தொலைநிலை Moon at apogee
9 15 குரு சந்திரன் அருகில் Jupiter 4.8S of Moon
10 8 சுக்கிரன் Venus 3.9N of Antares
10 12 புதன் கேட்டை அருகில் Mercury 1.9N of Antares
10 20 முழுநிலவு FULL MOON
11 4 செவ்வாய் அருகில் மகம் நட்சத்திரம் Mars 1.3N of Regulus
12 15 ரோஹினி அருகில் சந்திரன் Aldebaran 5.9S of Moon
13 7 நிலா மீ வடநிலை Moon furthest North (22.6)
14 3 புதன் அதிகபட்ச உயர்வு நிலை Mercury greatest elong E(23)



## ❖ ஐப்பசி மாத விசேஷங்கள்:

⁂ சுக்ல சஷ்டி: திங்கள் 31.10.2011 மாலை சூரசம்ஹாரம் & செவ்வாய் 1.11.2011
⁂ கிருத்திகை: வெள்ளி 11.11.2011
⁂ சுக்கில சதுர்த்தி: ஞாயிறு 30.10.2011
⁂ ஏகாதசி: ஞாயிறு 23.10.2011, ஞாயிறு 6.11.2011
⁂ சிவராத்திரி: செவ்வாய் 25.10.2011
⁂ அமாவாசை: புதன் 26.10.2011(தீபாவளி, கேதார கௌரி விரதம்)
⁂ சங்கடஹர சதுர்த்தி: திங்கள் 14.11.2011
⁂ பிரதோஷம்: திங்கள் 24.10.2011, செவ்வாய் 8.11.2011
⁂ பௌர்ணமி: வியாழன் 10.11.2011 (அன்னாபிஷேகம்)

## ஐப்பசி மாத சுப நாட்கள்

இங்கு தரப்பட்டுள்ள சுபநாட்கள் பொதுவானவை தங்களுக்கு பொருத்தமானதா என்பதை குடும்ப ஜோதிடரிடம் ஆலோசிக்கவும்

ஐப்பசி 2 புதன் 19.10.2011
காலை 9 மணிக்கு மேல் இரவு 9 மணி வரை நன்று, அனைத்து சுபமங்களும் செய்யலாம்

ஐப்பசி 6 ஞாயிறு 23.10.2011
அதிகாலை 4:30 மணிக்கு மேல் சூரிய உதயம் முன்னதாக 6 மணிக்கு முன்னர் மட்டும் நன்று
கிரஹப்பிரவேசம், நவக்கிரக ஹோமம் ,கணபதி ஹோமம் செய்திட உகந்த நேரம்.

ஐப்பசி 7 திங்கள் 24.10.2011 **ஸ்ரீ தன்வந்திரி ஜெயந்தி**
காலை 6:20 மணி முதல் நாள் முழுவதும் நன்று
நோய் நீங்கி நலம் பெற தன்வந்தரி பூஜை, ஹோமம் செய்திட மிகவும் உகந்த நாள், அனைத்து சுபங்களும் செய்யலாம்.

ஐப்பசி 9 புதன் 26.10.2011 தீபாவளி, கேதார கௌரி விரதம், சர்வ அமாவாசை
**தீபாவளி** **தலைக்குளியல் நேரம்:** காலை 3 மணிக்கு மேல் 5 மணிக்கு முன்னர் நன்று
**கேதார கௌரி விரதம் வழிபாடு நேரம்:**
* காலை 9 முதல் 9:48 வரை * மாலை 3:30 முதல் 5 மணி வரை * இரவு 7 மணிக்கு மேல் 9 மணி வரை

ஐப்பசி 11 வெள்ளி 28.10.2011 **வாஸ்து நாள்**
மாலை 4:30 மணிக்கு மேல் நன்று
நிச்சிய தாம்பூலம், நாட்டிய அரங்கேற்றம், மஞ்சள் நீராட்டு விழா, திருமண வரவேற்பு, சீமந்தம் செய்திட நன்று

**வாஸ்து நேரம்** (2 நாழிகை = 48 நிமிடம்)
வாஸ்து நேரம் துவக்கம் = (சூரிய உதயம் 6:02 +48) = காலை 6:50 வாஸ்து நேரம் முடிவு = (வாஸ்து நேர துவக்கம் + 1:30 மணி ) = காலை 8:20
முக்கியமான கட்டம் = (வாஸ்து மொத்த நேரம் / 5 ) ✕ 3 + வாஸ்து நேர துவக்கம் = 90/5 = 18 நிமிடம்
18 நிமிடம் ✕ 3 = 54 நிமிடம். 6:50 + 54 = காலை 7:44 மணி முதல் காலை 8:20 மணி வரை( முக்கியமான கட்டம்)
★ நேரம் சென்னைக்கும் அதன் சுற்று வட்டராத்திற்கும் பொருந்தும். ★ சூரிய உதய கணக்கீட்டில் உள்ள வெவ்வேறு முறைகளால் 3 நிமிட வேறுபாடு இருக்கும்.

**யம துவதியை** : இன்று சகோதரிகள், சகோதரர்களை சந்தித்து ஆசி பெற்றால் ஆயுள் விருத்தியடையும்

ஐப்பசி 13 ஞாயிறு 30.10.2011
★அதிகாலை 4:30 முதல் காலை 6 மணி வரை நன்று. கிரஹப்பிரவேசம், கணபதி ஹோமம் செய்திட நன்று
★மதியம் 1:30 மணிக்கு மேல் இரவு வரை நன்று
நிச்சிய தாம்பூலம், நாட்டிய அரங்கேற்றம், மஞ்சள் நீராட்டு விழா, திருமண வரவேற்பு, சீமந்தம் செய்திட நன்று

ஐப்பசி 14 திங்கள் 31.10.2011 - கந்த சஷ்டி
அதிகாலை முதல் மாலை 4 மணி வரை நன்று. அனைத்து சுபங்களும் செய்யலாம்

ஐப்பசி 16 புதன் 2.11.2011
விடியற்காலை முதல் மாலை 3 மணி வரை நன்று. அனைத்து சுபங்களும் செய்யலாம்

ஐப்பசி 18 வெள்ளி 4.11.2011
மாலை 4:30 மணிக்கு மேல் நன்று.
நிச்சிய தாம்பூலம், நாட்டிய அரங்கேற்றம், மஞ்சள் நீராட்டு விழா, திருமண வரவேற்ப்பு, சீமந்தம் செய்திட நன்று

ஐப்பசி 21 திங்கள் 7.11.2011
சுபநாள்- நாள் முழுவதும் நன்று. அனைத்து சுபங்களும் செய்யலாம்

ஐப்பசி 23 புதன் 9.11.2011
அதிகாலையில் கணபதி ஹோமம், பரிகார ஹோமம், நவக்கிரக ஹோமம் செய்திட உகந்த நாள்.
<u>சூரிய உதயத்திற்கு முன்னர் மட்டும் செய்யவும்</u>

ஐப்பசி 27 ஞாயிறு 13.112011
நாள் முழுவதும் நன்று. அனைத்து சுபங்களும் செய்யலாம்

ஐப்பசி 28 திங்கள் 14.11.2011
சுப நாள். அதிகாலை முதல் மதியம் 12 மணி வரை நன்று.
அனைத்து சுபங்களும் செய்யலாம்

ஐப்பசி 30 புதன் 16.11.2011
சுப நாள். அதிகாலை முதல் நாள் முழுவதும் நன்று. அனைத்து சுபங்களும் செய்யலாம்

திருக்கணிதப்படி
**சனிப்பெயர்ச்சி**
இந்திய நேரப்படி **15.11.2011** செவ்வாய்
காலை 10:12 மணி அளவில்
சனிக்கிரகம் துலா இராசியில் பிரவேசம்

---

❖ **மாலை நேர சுப நாட்கள்** (மாலை 6 - 7:30 என் கிற நிலையில்) - நிச்சிய தாம்பூலம், சீமந்தம், திருமண வரவேற்ப்பு, மஞ்சள் நீராட்டு விழா, நடன அரங்கேற்றம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| புதன் | 19.10.2011 | திங்கள் | 24.10.2011 | வெள்ளி | 28.10.2011 | ஞாயிறு | 30.10.2011 |
| வெள்ளி | 04.11.2011 | திகங்கள் | 07.11.2011 | ஞாயிறு | 13.11.2011 | புதன் | 16.11.2011 |

---

❖ **கிரஹப்பிரவேசம், கணபதி ஹோமம் செய்திட**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| புதன் | 19.10.2011 | திங்கள் | 31.10.2011 | ஞாயிறு | 13.11.2011 |
| ஞாயிறு | 23.10.2011 | புதன் | 02.11.2011 | திங்கள் | 14.11.2011 |
| திங்கள் | 24.10.2011 | திங்கள் | 07.11.2011 | புதன் | 16.11.2011 |
| ஞாயிறு | 30.10.2011 | புதன் | 09.11.2011 | | |

---

❖ ஐப்பசி மாதம் கர வருடம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| V | 02 | 19.10.2011 | புதன் | தேய்பிறை | சப்தமி | புனர்பூச | சித்த | 9.00 – 10.30 | தனுசு |
| VT | 07 | 24.10.2011 | திங்கள் | தேய்பிறை | துவாதசி | உத்திரம் | சித்த | 6.00 – 7.30 | துலாம் |
| VT | 14 | 31.10.2011 | திங்கள் | வளர்பிறை | பஞ்சமி | மூலம் | சித்த | 6.00 – 7.30 | விருட்சி |
| VT | 16 | 02.11.2011 | புதன் | வளர்பிறை | சப்தமி | உத்திராட | அமிர் | 6.00 – 7.30 | விருட்சி |
| VT | 21 | 07.11.2011 | திங்கள் | வளர்பிறை | துவாதசி | உத்திரட் | சித்த | 6.00 – 7.30 | விருட்சி |
| VT | 27 | 13.11.2011 | ஞாயிறு | தேய்பிறை | திருதியை | ரோகிணி | சித்த | 7.30 – 9.00 | தனுசு |
| VT | 28 | 14.11.2011 | திங்கள் | தேய்பிறை | திரு+சது | மிருகசீரி | அமிர் | 6.00 – 7.30 | விருட்சி |
| VT | 30 | 16.11.2011 | புதன் | தேய்பிறை | பஞ்+சஷ்டி | புனர்பூசம் | சித்த | 6.00 – 7.30 | விருட்சி |

❖ கார்த்திகை மாதம் கர வருடம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| V | 05 | 21.11.2011 | திங்கள் | தேய்பிறை | ஏகாதசி | உத்திரம் | சித்த | 6.00 – 7.30 | விருட்சி |
| VT | 07 | 23.11.2011 | புதன் | தேய்பிறை | திரயோதசி | சித்+சுவாதி | சித்த | 6.00 – 7.30 | விருட்சி |
| VT | 11 | 27.11.2011 | ஞாயிறு | வளர்பிறை | திருதியை | மூலம் | அமிர் | 7.30 – 9.00 | தனுசு |
| V | 14 | 30.11.2011 | புதன் | வளர்பிறை | சஷ்டி | திருவோ | சித்த | 4.00 – 5.30 | துலாம் |
| VT | 15 | 1.12.2011 | வியா | வளர்பிறை | சப்தமி | அவிட்டம் | சித்த | 7.30 – 9.00 | தனுசு |
| VT | 18 | 4.12.2011 | ஞாயிறு | வளர்பிறை | தசமி | உத்திரட்டாதி | அமிர் | 6.30 – 7.30 | விருட்சி |
| VT | 19 | 5.12.2011 | திங்கள் | வளர்பிறை | தசமி | உத்தி- ரேவதி | சித்த | 6.00 – 7.30 | தனுசு |
| VT | 28 | 14.12.2011 | புதன் | தேய்பிறை | சதுர்த்தி | பூசம் | சித்த | 6.00 – 7.30 | தனுசு |

---




**தணிகை பஞ்சாங்கம்** பாலு சரவண சர்மா
*பரம்பரை புரோகிதர்- ஜோதிடர்- பஞ்சாங்க கணணம்*
தொலைபேசி: 91 44 2226 1742, 91 98403 69677
மின்னஞ்சல்: prohithar@gmail.com இணையம்: www.prohithar.com
எண் 9, 4வது தெரு, கல்யாண் நகர், தாம்பரம்(மே), சென்னை 45, பாரத நாடு.
தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகிறது


thanigai panchangam


காப்புரிமை © 15.5.2011